08.04.2025 சி.சி.1329/2019 அசா.1 அமுதா

எதிரிகள் தரப்பில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நானும் எதிரிகள் 1 முதல் 7 வரையிலுள்ளவர்களும் சமரசமாக பேசிக்கொண்டு இந்த வழக்கை முடிக்க ஒப்புக்கொண்டுள்ளோம். இந்த சமரசத்தின் தீர்வாக என்னுடைய குழந்தையின் பெயர் (ஹனாகிரேஸி) என்பவரின் பெயரில் ரூ.4 லட்சம் வைப்பீட்டு தொகையாக கிஷான் விகாஷ் பத்திரா என்ற சேமிப்பு திட்டத்தில் அஞ்சல் அலுவலகத்தில் எதிரிகளால் தொடங்கப்பட்டு வைப்பீட்டு தொகையை எதிரிகள் செலுத்தியுள்ளனர் (அந்த சேமிப்பு கணக்கின் விபரங்கள் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதன் நகல் எ.சா.அ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது). இந்த தொகையானது 2034ம் வருடத்தில் ரூ.8 லட்சமாக முதிர்வடையும் என்றால் சரிதான். மேலும் என்னுடைய பெயரிலும் ரூ.4 லட்சம் எதிரிகளால் வைப்பீட்டு தொகையாக அஞ்சல் அலுவலகத்தில் ஒரு சேமிப்பு கணக்கில் அக்கவுண்டில் செலுத்தப்பட்டது என்றால் சரிதான். (அந்த சேமிப்பு கணக்கின் விபரங்கள் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு அதன் நகல் எ.சா.அ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

2) தற்போது என்னிடம் காட்டப்படும் சமரச உடன் படிக்கை பத்திரம் என்னுடைய முழு சம்மதத்தின் பெயரில் எனக்கும் எதிரிகளுக்கும் இடையே ஏற்பட்ட சமரசத்தை தொடர்ந்துதான் எழுதப்பட்டது. (சமரச உடன் படிக்கை அசல் எ.சா.அ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது). இதற்கு சாட்சியாக 2ம் எதிரியின் அக்காவின் மகனான பாபு மற்றும் என்னுடைய அக்காவான ஆவுடை அம்மாளின் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

3) எங்களிடையே ஏற்பட்ட சமரசத்தின்காரணமாக நான் இந்த வழக்கை திரும்ப பெற்றுக்கொள்ள எனக்கு சம்மதம் என்றால் சரிதான். எதிரிகள் இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான்.